மலர் : 19
இதழ் : 09

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

செப்டம்பர் 2024

தனிச்சுற்றுக்கு மட்டும்



# விவிலிய மாந்தரும் அன்பியமும்

வாரம்
1

# பழைய ஏற்பாட்டில் அன்பியக் கூறுகள்

அருட்பணி ம. டைட்டஸ் மோகன்



*"இணைந்து நடப்போம், இணைந்து பயணிப்போம், இணைந்து வாழ்வோம்"*

என்பது தான் திரு அவையின் இலக்கு. இதில் ஒருவர் மற்றவருக்கு செவிமடுப்பதும் (Dynamism of Mutual Listening), இணைந்து நலமான, உறுதியான முடிவுகளை மேற்கோள்வதும் (Dynamism of Joint Decision Making) திருஅவையின் தொடர் வாழ்வுக்கும் பணிக்கும் ஊட்டச்சத்தாய் எப்பொழுதும் அமைகிறது என்பதனை மீண்டும் நிருபிக்கின்றது 16 -வது அகில உலக ஆயர் மன்றம்.

பல்வேறு இன, மொழி, கலாச்சார மக்கள், தங்களின் தனித்தன்மையை இழந்துவிடாமலேயே ஓர் அன்பு சமூகமாக வாழ முடியும் என்பது தொடக்ககால திருஅவையின் அனுபவம். முதல் மூன்று நூற்றாண்டுகள் வரை இணைந்த வாழ்வு, துணிந்த பணி, முனைப்பு பயணம் (தி.ப. 2 : 42- 47, 4 : 32-36) என திருஅவை இல்ல திருஅவையாகவே (Domestic Church) பயணித்தது. பின்னர் திருஅவையில் நிலவிய அதிகாரமையம், ஆட்சிமையம், பணமையம். செல்வாக்குமையம் போன்றவற்றால் திருஅவை சீர்குலைந்தது. திருஅவையின் பணியாளர்கள் ஆட்சியாளர்களாக மாறிப்போனதால் திருஅவை தனது இயல்பான இணைந்த வாழ்வும், இணைந்த பணியும் என்ற எதார்த்தத்தை இழந்தது. இந்நிலையில் திருஅவை உண்மை இயல்புக்குத் திரும்பிச் செல்லவும், இயேசுவின் இறையாட்சி இலக்கோடு இணைந்துப் பணியாற்றவும் பல்வேறு காலகட்டங்களில் திருஅவையில் மாற்றங்கள் நிகழ்ந்தன. அம்மாற்றங்களில் ஒன்றுதான் அன்பியங்கள்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உதயமாகி, ஆப்பிரிக்க கண்டங்களில் கிளைபரப்பி, ஆசிய நாடுகளில் கோலோச்சோங்கும் இவ்வமைப்பு முறையானது. அதன் விவிலிய நாளங்களை ஆய்ந்து, தெரிந்து தெளிதல் பெறுதல் அவசியம். இந்நோக்கில் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு நூல்களில் காணக்கிடக்கும் அன்பியக் கூறுகளைச் சேகரிப்பதே இப்பகுதியின் நோக்கம். இம்முதல் பிரிவில் பழைய ஏற்பாடு எடுத்துரைக்கும் அன்பியக்கூறுகளை அலசுவோம்.

## அடித்தளம் மூவொரு இறைவன்

"அனைத்துலக திருஅவை தந்தை, மகன், தூய ஆவி ஆகியோரிடையே உள்ள ஒற்றுமையோடு ஒன்றிணைந்த ஒரு மக்கள் குலம் போல் திகழ்கிறது" என்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு. திருஅவை எண் 4. மூவொரு இறைவனின் குடும்பத்தை ஒரு சிறந்த அன்பியம் எனலாம். மூவருக்கும் இடையே உள்ள ஒற்றுமை, அன்புப் பரிமாற்றம், ஒன்றித்துத் திட்டமிட்டுச் செயல்படுதல், சிந்தித்தல், வல்லமையில் சமத்துவம் போன்றவைதான் அன்பிய மூலக்கூறுகள். பழைய ஏற்பாட்டில் அன்பியம் தனது முழு பரிமாணத்தோடு இஸ்ரயேல் மக்களிடத்தில் காணப்படவில்லை. எனினும், மூவொரு இறைவனின் உடனிருப்பும் வழிநடத்துதலும் இஸ்ரயேல் இனத்தை ஓர் அன்பிய குலமாய் வாழ வைத்தது என்பதே உண்மை.

முதலில் இஸ்ரயேல் இனம் சீனாய் உடன்படிக்கையின் வழியாக இறைவனுக்கு சொந்தமான மக்களினமாக உருவெடுக்கின்றனர் (வி.ப. 19 : 6). இவ்வுடன்படிக்கை இஸ்ரயேல் மக்களிடையே

சகோதரத்துவத்தை உருவாக்குகிறது. சகோதரத்துவ மனப்பான்மையின் வெளிப்பாடாக ஒருவர் மற்றவருடைய சுதந்திரத்தை மதித்து யூபிலி- ஆண்டில் மேற்கோள்ள வேண்டிய நற்படிப்பினைகளைக் கூட்டாக வாழ்வாக்குகின்றனர்(லேவி. 25 : 10). நான் என் தம்பிக்கு என்ன காவலாளியா? என்று கேட்கிற காயீன்களாக அல்லாமல் துன்பத்தில் துயர் துடைக்கும் நல்ல சமாரியன்களாக வாழ அழைக்கப்பட்டனர். இறைவனின் நியமனங்கள்படி நடக்கவும், தம் இனத்தவரை ஏமாற்றாதவாறு நடந்து கொள்ளவும். ஏழைகளுக்கு கடன் கொடுக்கவும், அடிமைகளை மீட்கவும் விதிமுறைகளை வகுத்துக்கொண்டனர். இதனால், இஸ்ரயேல் மக்கள் தங்களையே தனித்தனி ஆளுமை உடையவர்களாகக் கருதாமல் (Individual Personality) ஒரே கூட்டு ஆளுமை (Corporate Personality) உடையவர்களாகக் கருதினர். தனி மனிதனுடைய பலத்திற்கும் பலவீனத்திற்கும், விருப்பத்திற்கும் வெறுப்பிற்கும் சமூகம் பொறுப்பேற்கத் தொடங்கியது. அதே வேளையில் ஒருவரோ அல்லது சிலரோ மட்டும் அனைத்தையும் வழிநடத்துவதும், சீர்படுத்துவதும் சிரமம் என்கிற நிலை ஏற்பட்டது. உதாரணமாக, மோசே மட்டும் காலை முதல் மாலை வரை மக்களுக்கு நீதி வழங்குவதையும், மக்கள் அலைகடலென அவரைச் சூழ்ந்து நிற்பதையும் அவருடைய மாமனார் கண்டு, மக்களை சிறுசிறு குழுக்களாகப் பிரித்து, குழுத்தலைவர்கள் மூலமாக மக்களுக்கு நீதி வழங்க ஆலோசனைக் கொடுக்கின்றார். இதனை வி.ப.25 : 18-24 வரையுள்ள பகுதிகளில் வாசிக்கின்றோம். மோசேயின் பணிச்சுமை குறைகிறது. இஸ்ரயேல் மக்களிடையே கூட்டமைப்பு நிலவுகிறது. வழிநடத்தும் பணியில் கூட்டுப்பொறுப்பும் ஏற்படுகிறது. இதற்கு சிறந்த உதாரணம், கானான் நாட்டை உளவு பார்க்க மோசே சிலரை அனுப்பிய நிகழ்வு. அனுப்பப்பட்டவர்கள் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பிலுள்ள அனைவரிடமும் சென்றனர் கூட்டமைப்பு முழுமைக்கும் செய்தியை விரைவாக, எளிதாக கொண்டு சென்றனர் (எண் 13 : 26). இங்ஙனம், இஸ்ரயேல் இனத்தின் பணிப்பகிர்விலும், இணைந்த செயல்பாட்டிலும் அன்பியக் கூறுகள் தென்படுகின்றன.

சுருங்கக்கூறின், இஸ்ரயேல் மக்களுடைய வாழ்வின் துவக்கத்திலே மூவொரு இறைவனின் உடனிருப்பு அவர்களை வழிநடத்தியது, அவர்கள் சிறுசிறு குழுக்களாகச் செயல்பட்டனர். அக்குழுக்களை நீதிபதிகளாய் நியமிக்கப்பட்டவர்கள் வழிநடத்தினர். அவ்வப்போது தேவைக்கேற்ப இஸ்ரயேலின் கூட்டமைப்பு ஒன்றுகூடி செயல்பட்டனர். இவையே பழைய ஏற்பாட்டில் நாம் காணும் அன்பியக்கூறுகள்.

சிந்திக்க :

1. எந்தெந்த பண்புகள் இருந்தால், ஒன்றுகூடுவதால் வெற்றி பெறும் ?
2. மூவொரு இறைவனின் குடும்பம் ஒரு சிறந்த அன்பியம் ஏனென்றால் நமது குடும்பங்கள் அன்பியம் ஆகிறதா?



வாரம் 2

# பழைய ஏற்பாட்டில் அன்பியக் கூறுகள்

அருட்பணி மோ. ஆல்வின் விஜய்

**மண் ஒன்றுபட்டதால் வலிமையானது மலை.**

**குடும்பங்கள் ஒன்றிணைந்தால் உருவாகிறது அன்பு சமூகம்.**

இறையாட்சியின் மதிப்பீடுகளாகிய அன்பு, உண்மை, நீதி, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம், பகிர்வு இவையனைத்தும் வாழ்வின் எல்லா நிலைகளிலும் மலர்ந்திட தூண்டும் ஓர் உறவு சமூகம். யாவே இறைவன் தனித்து இயங்காமல் மோசே வழியாக இயக்கமாக இயங்கினார். பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்களிடம் அன்பிய பரிமாணங்கள் முழுமையாக காணப்படாவிட்டாலும், அன்பியத்தின் சில கூறுகள் காணக் கிடைக்கின்றன.

## சமத்துவம் பேணும் யூபிலி விழா

உடன்படிக்கை உறவின் தாக்கம் இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் வெளிப்பட்டது. இறைவனுக்கு சொந்தமான மக்கள் அல்ல, கடவுளின் குழந்தைகள் என்ற முறையில் இஸ்ரயேல் மக்களிடையே சமத்துவ சகோதரத்துவ மனப்பாண்மை மலர்ந்தது. இந்த சகோதரத்துவ உணர்வு ஒருவர் மற்றவரின் தனிப்பட்ட சுதந்திரத்தை மதிக்கவும், யாரையும் அடிமை படுத்தாமல் வாழவும், இழந்ததை மீண்டும் பெற்றுக்கொள்ளவும், நில அபகரிப்பு மற்றும் தன்னுரிமை இழப்பு இவை அனைத்தையும் களையவும், மனமாற்றத்தின் அடையாளமாகவும் ஒவ்வோர் 50 - ஆம் ஆண்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களின் சமத்துவம், சகோதரத்துவம், தன்னுரிமை, ஒப்புரவு, மன்னிப்பு ஆகியவை பகிர்ந்து வாழவும், விட்டுக்கொடுத்து சமத்துவ சமுதாயமாக மாறவும் அழைப்பு விடுப்பதே யூபிலி விழாவாகும் (லேவி. 25)

## சமத்துவ வாழ்வு வாழத்தூண்டும் மன்னா

இருப்பதை இல்லாதவரோடு பகிர்வதே ஈகை குணம். பாலை நிலத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் மன்னாவை வழங்கினார்.



1. அந்தந்த நாளுக்குரிய மன்னாவை சேகரிக்க மட்டுமே பணிக்கப்பட்டிருந்தனர்.
2. ஆறாம் நாள் இரண்டு நாளுக்குரிய மன்னாவைச் சேகரித்தனர்.

இவ்விரண்டு விதிமுறைகளையும் அவர்கள் மீறியபோது பயன்படுத்த முடியாத நிலையில் மன்னா இருந்தது (வி.ப. 16 : 17-21). எனவே, இஸ்ரயேல் மக்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக இருந்த மன்னாவை ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து உண்டார்கள். மக்கள் இத்தகைய ஈகை குணத்தோடு வாழ்வதற்கு கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு கற்றுக்கொடுத்தார்.

**குழு ஆளுமை**

இறைவனுக்கு சொந்தமான மக்கள் இறை சட்டங்களின் வழிகாட்டுதல்படி நடக்க வேண்டும்.

**"என் கட்டளைகளை கடைப்பிடித்தால் நீங்கள் என் மக்களாக இருப்பீர்கள்,**

**நான் உங்கள் கடவுளாக இருப்பேன்"**



என்று இறைவன் கூறியுள்ளார். எனவே, இஸ்ரயேல் இறை சமூகம் யாரையும் ஏமாற்றாத சமூகமாகவும், ஏழைகள் மீது இரக்கம் காட்டி, கடன் உதவிகள் செய்யும் சமூகமாகவும், தனது சமூகத்தை சேர்ந்த அடிமைகளை மீட்க பாடுபடும் சமூகமாகவும் இருக்க வேண்டும். மேலும், இஸ்ரயேல் மக்கள் தங்களை தனிநபர் ஆளுமை உடையவர்களாக காண்பதை காட்டிலும், குழு ஆளுமை உடையவர்களாகவே பார்க்க விரும்பினார்.

**"எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்"** (வி.ப. 2:5)

என்று இஸ்ரயேல் மக்களிடம் மோசே வழியாக பணித்தார்.

பழைய ஏற்பாட்டில் அன்பியம் என்ற அடித்தள இறை சமூகம் இல்லையென்றாலும், இஸ்ரயேல் மக்களிடத்தில் சில குழுக்கள் இருந்தது என்பதும், அக்குழுக்கள் இறையருளால் வழிநடத்தப்பட்டுள்ளது என்பதும் நமக்கு கிடைக்கும் அடிப்படை உண்மைகளாகும். எனவே, இந்த இஸ்ரயேல் மக்களிடத்தில் அன்பிய கூறுகள் இருந்தது என்பதை யாரும் மறக்க முடியாது.

**சிந்திக்க :**

1. யூபிலி- ஆண்டு சமத்துவ உணர்வை நம்மில் உணர்த்துகிறதா ?
2. சமத்துவம் காண பகிர்வு மனநிலை நம்மில் எப்படி உள்ளது ?

வாரம் 3

# பழைய ஏற்பாட்டில் அன்பியக் வாழ்வியல் கூறுகள்

அருட்பணி. P. சகாய தாஸ்

2007-ஆம் ஆண்டில் ஜுலை 31 முதல் ஆகஸ்ட் 5 முடிய தூத்துக்குடியில் கூடிய தமிழக இலத்தீன் ஆயர்களின் பேரவை அன்பியத்தை மேய்ப்புப்பணி முதன்மையாக அறிவித்தபோது அன்பியம் என்பது ஒரு வாழ்க்கை முறை என்று விளக்கிச் சொன்னது. "அன்பியங்கள் திரு அவையை புதிய இயல்புக்கு இட்டுச் செல்லவும், நம்பிக்கை துடிப்பு மிக்க இமைகளின் இயக்கமாக மாறவும், அன்பும் நீதியும் கொண்ட சமூகமாக விளங்கவும், இறைவார்த்தைக்கு செவிமடுத்து, செயல்படுத்தி, அதனை அறிக்கையிட வேண்டும். இப்படி அன்பியங்கள் நற்செய்திப் பகிர்வை மேற்கொண்டு, இறைவார்த்தையை அடித்தளமாகவும், கிறிஸ்துவை மையமாகவும் கொண்ட சமூகங்களாக உருவாகும்போது, திருஅவை புதிய இயல்புடையதாக மாறும்" என்ற தமிழக ஆயர் பேரவையின் விளக்கமானது அன்பியம் எனும் வாழ்வு முறை தொடக்க திருஅவையின் வாழ்வுமுறைக்கு நம்மை மீண்டும் அழைத்துச் செல்லத் தூண்டுவதாக அமைந்தது. "வேர்களுக்கு செல்வோம்" என்ற கண்ணோட்டத்தோடு திரு அவை தனது இயல்புகளை மீள் கண்டுபிடிப்புச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. புதிய ஏற்பாட்டில் அன்பிய வாழ்வியல் கூறுகள் என்ற இக்கட்டுரையின் நோக்கமும் அன்பிய வாழ்வுமுறை எவ்வகையிலும் புதியது அல்ல. தொடக்க திரு அவை வாழ்வியலின் மறு உருவாக்கமே என்பதை நிறுவுவது ஆகும்.

## நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை

### 1. ஒன்றிப்பு :

இயேசுவில், அவரது வாழ்வியல் நெறிகளில் நம்பிக்கைக் கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர் தி.ப : 4 - 32. நம்பிக்கையாளர் அனைவரும் ஒன்றாயிருந்தனர் (தி.ப 2:4). தொடக்க திருஅவையின் வலிமையே மக்கள் ஒருமைப்பட்டு வாழ்வதுதான். தந்தையே நீ என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல அவர்களும் நம்முள் ஒன்றாயிருப்பார்களாக (யோவா. 17 : 21) என்ற இயேசுவின் மன்றாட்டை தமது வாழ்வாக மாற்றிக்காட்டியது தொடக்க திரு அவையின் சிறப்பாகும். அன்பியத்தின் சிறப்புக்கூறே அதன் அளவு தான். பெரிய பங்கு சமூகங்களில் மக்கள் காணாமல் போய் விடுவது எளிது. ஆனால், அன்பியம் எனும் சிறிய குழுவில் மக்கள் ஒன்றித்து வருவது சிரமமன்று. ஒற்றுமை என்பது வெறுமனே ஒன்றுகூடுவது மட்டுமல்ல. என்ன செய்தார்கள், எப்படி வாழ்ந்தார்கள் என்பதில் தான் தொடக்க திருஅவையின் மாண்பு அடங்கி உள்ளது.

### 2. இறைவேண்டல் :

மனத்தோடு கோயிலில் தவாறாது கூடி வந்தார்கள், பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தை பிட்டு உணவைப் பகிர்ந்து வந்தார்கள் (தி.ப 2:46), சேர்ந்து வந்த மக்கள் இறைவார்த்தையைப் பகிர்ந்து கொள்வதோடு அப்பங்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள். பசி எனும் பேச்சுக்கே அங்கு இடமில்லை. எல்லோரும் உணவு நிச்சயமாகிப்பே பாகிறது. இறைவார்த்தைப் பகிர்வோடு தங்களை நிறுத்திக்கோள்ளாமல் உணவையும் பகிர்ந்து உறவில் வளருகிறார்கள். அன்பியம் என்பது இறைவார்த்தையை வாசிப்பதையும் கடந்து வாழ்வதற்கு நம்மை உந்தித்தள்ள வேண்டும்.





**3. உடைமைப்பகிர்வு :**

தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை தி.ப. 4:34. யார் யாருக்கு என்ன தேவையோ, எவ்வளவு தேவையோ அவை அவர்களுக்குள் கொடுக்கப்பட்டன. யாரும் இது என்னுடையது என்ற குறுகிய மனநிலையோடு வாழவில்லை. அன்பியமும் பிறருடைய தேவையில் உடனிருக்க, கரம் கொடுக்க நம்மை அழைக்கிறது. சுயநல சுவர்களை உடைத்து ஒரு குடும்ப உணர்வை வளர்க்க துணை செய்ய வேண்டியது அவசிய கடமையாகிறது.

**4. உறவே புனிதம் :**

உறவுதான் அவர்தம் வாழ்வின் வேதமாக அமைந்திருந்தது. அந்த உறவு ஒருவரின் துன்பத்தைக் கண்டு ஒதுங்கிச் செல்வதல்ல. ஒருவரின் துன்பத்தை எல்லோரின் துன்பமாகப் பார்ப்பது ஆகும். 'ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும்' (1 கொரி. 12: 26). இத்தகைய உறவுதான் புனிதம். தேவைக்கு பயன்படுத்திவிட்டு தேவை என வரும்போது தூக்கி எறிவது அல்ல. மாறாக, தேவைகளில் உடனிருந்து, உதவுவது ஆகும். அன்பியங்களில் வெளிப்பட வேண்டிய உறவு இத்தகைய தன்மைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**5. எல்லோரும் முக்கியமானவர்கள் :**



திரு அவையின் உறுப்பினர்கள் எல்லோரும் முக்கியமானவர்கள் என்ற உணர்வு தொடக்க திரு அவையில் இருந்துள்ளது. சிலர் மட்டும் முக்கியமானவர்கள் என்ற நிலை அங்கு இருக்கவில்லை. சிறப்பு சலுகை பெற்றவர்கள் என்றோ, உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் என்றோ யாரும் அங்கு இருக்கவில்லை. எல்லோருக்கும் சம மாண்பும், சம மரியாதையும் கொடுக்கப்பட்டது. 'கண் கையைப் பார்த்து எனக்கு தேவையில்லை என்றோ, தலை கால்களைப் பார்த்து நீங்கள் எனக்கு தேவையில்லை என்றோ சொல்ல முடியாது' (1 கொரி. 12:21) என்ற பவுலடிகளாரின் வார்த்தைகள் இதை உணர்த்தி நிற்கின்றன. அன்பியங்களில் இந்த மனநிலைகள் வளர வேண்டும். சிறப்பு நன்கொடையாளர்கள் என்பதால் உயர்ந்த மரியாதை எதுவும் கொடுக்க முடியாதவர் என்பதால் குறைந்த மரியாதையும் வழங்கப்படுவது அன்பிய வாழ்வியல் முறைக்கு எதிரானது.

தொடரும்.....

வாரம் 4

# பழைய ஏற்பாட்டில் அன்பியக் வாழ்வியல் கூறுகள்

அருட்பணி. P. சகாய தாஸ்

கடந்த வார தொடர்ச்சி.....

**6. துன்பங்களில் தளரவில்லை :**

தொடக்க திருஅவை கடுமையான துன்பங்களை அனுபவித்தது. உரோமையர்கள் நம்பிக்கையாளர்களை எதிர்த்தார்கள். யூதர்கள் நம்பிக்கையாளர்களை மிகக் கடுமையாக ஒடுக்கினார்கள். எங்கு சென்றாலும் திருத்தூதர்களும் நம்பிக்கையாளர்களும் வெறுக்கப்பட்டார்கள். ஆயினும், துன்பங்களின் மத்தியில் தொடக்க திருஅவை இன்னும் ஆழமான நம்பிக்கையில் வளர்ந்தது. தூய பவுல் தெசலோனிக்க நகரத்து மக்களுக்கு எழுதும்போது "உங்கள் துன்பங்களுக்கிடையே நீங்கள் காட்டிய சகிப்புத் தன்மையும், இன்னல்களுக்கிடையே நீங்கள் கொண்டிருந்த மன உறுதியையும், நம்பிக்கையும் முன்னிட்டு பெருமைப்படுகிறோம்" (2 தெச. 1:4) என்று குறிப்பிடுகிறார். தொடக்க திரு அவை 'துன்பங்களைக் கண்டு அஞ்சவில்லை, இறையாட்சிக்காகவே நீங்கள் துன்புறுகிறீர்கள்' (2 தெச. 1:5) என்ற பவுலின் வார்த்தைகள் அவர்களின் ஆழ்ந்த உள உறுதிப்பாட்டை விளக்கி நிற்கிறது. அன்பியங்களும் இறையாட்சிக்காக துன்பங்களை ஏற்க முன் வர வேண்டும். சவால்களை நெருக்கடிகளைக் கண்டு அச்சம் கொள்ளக்கூடாது. பிரச்சனைகளற்ற வாழ்க்கை என்பது கிறிஸ்துவுக்கு எதிரானது. நல்லவை செய்தலின் பொருட்டு வரும் துன்பங்களை தாங்கி சான்று வாழ்க்கை வாழ அன்பியங்கள் முன்வர வேண்டும்

**7. உரையாடி தீர்வுகள் கண்டனர் :**



சிக்கல்களும் வழமையான நடைமுறைகளும் மாற்றப்பட வேண்டும் என்ற குரல்கள் எழும்பிய நேரங்களில் தொடக்க திருஅவை உரையாடல் மூலம் அதற்கு தீர்வுக் கண்டது. மோசேயின் சட்டப்படி விருத்தசேதனம் செய்வது எல்லோருக்கும் கட்டாயம் என்று பரிசேய கட்சியினரும், யூத கிறிஸ்தவர்களும் நின்று உரக்க பேசி இணக்கமான முடிவு எடுக்க உதவுகின்றனர். எருசலேம் சென்று மூப்பர்களிடம் கலந்து பேசி யூத கிறிஸ்தவர்களுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுக்க உதவினர் (தி.ப. 1:5) மாறுபட்ட கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டாலும் உரையாடலின் முடிவில் இணக்கமான தீர்வினை எட்ட எல்லோரும் பங்களிக்கின்றனர். எத்தகைய திணிப்பும் அங்கு இருக்கவில்லை. எல்லோருக்கும் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள சுதந்திரம் வழங்கப்பட்டது.

இந்த பண்புதான் தொடக்க திருஅவையின் அடையாளமாக இருந்தது. அன்பியங்களும் உரையாடல் மூலம் தங்கள் மத்தியிலுள்ள சிக்கல்களுக்கு தீர்வு காண்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த உரையாடலும் சிறு குழு அளவில் நடைபெறும் போது எல்லோருடைய குரலும் கேட்கப்படுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.

**8. எளிய சமூகங்களுக்கு உதவினர் :**

தங்களைவிட வறுமைப்பட்ட சபைகளுக்கும், சமூகங்களுக்கும் தாராளமாக தொடக்க திருஅவை உதவி வந்துள்ளது. தூய பவுல் தன்னுடைய கடிதங்களில் எளிய சபைகளுக்கு உதவுவதைப்பற்றி அதிகமாகக் கூறியுள்ளார். குறிப்பாக, கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமடலில் 'அவர்கள் வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள். அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு தாங்களாகவே கொடுத்தார்கள், ஏன் அளவுக்கு மீறியே கொடுத்தார்கள்' (2 கொரி 8:3). மாசிதோனியா திருஅவையைப்பற்றி பவுல் இவ்வாறு குறிப்பிடுவது நம்பிக்கையாளர்களைக் கொண்ட சிறுசிறு திருஅவைகள்

எவ்வாறு பிற சபைகளின் தேவைகளில் துணையாக இருந்தார்கள் என்பதை விளக்குகிறது. அன்பிய சமூகங்களும் இத்தகைய பண்பு நலன்களை அடிப்படையாகக் கொண்டவையே. சக சமூகங்கள் மீதான கரிசனை என்பது கட்டாயப்படுத்தி வரவைக்கப்பட வேண்டியதல்ல. அதுவே சபைகளின் உள்ளார்ந்த இயல்பாக உருவாக வேண்டியது என்பது தெளிவாகிறது.

### 9. தவறுகளை கண்டிக்கும் தகைசார் தலைமை :

தொடக்க திருஅவை பவுல், பர்ணபா, மாற்கு, தீமொத்தேயு, பேதுரு போன்ற அர்ப்பண உணர்வுமிக்க தலைவர்களால் நிரம்பியிருந்தது. அவர்களிடையே வழிநடத்தும் பண்புகளில் முக்கியமானது தவறுகளை கண்டிக்கும் பண்பு, தூய பவுல் பேதுருவையே கண்டிக்கும் அளவுக்கு நேர்மையும், நீதியும், அறநெறி வாழ்வும் கொண்டவராகத் திகழ்ந்தார். யாக்கோபு யூத நெறிமுறைகளை கடுமையாக பின்பற்றும் திருத்தூதர் ஆவார். அவருக்கு ஆதரவாக பல சீடர்கள் இருந்தனர். அந்தியோக்கியா சென்ற பேதுரு யாக்கோபின் ஆட்கள் வருமுன்னால் பிற இனத்தவர்களோடு உண்கிறார். அவர்கள் வந்தபின் அவ்வாறு உண்ண மறுக்கிறார். இந்த வெளிவேடத்தன்மையை, இரட்டை நிலைப்பாட்டை பவுல் நேரடியாகக் கண்டிக்கிறார். பேதுருவைப் பின்பற்றி பர்ணபா உட்பட பல சீடர்கள் பிற இனத்தவரோடு உண்ண மறுக்கின்றனர். இதனால் பேதுருவை பவுல் எல்லோர் முன்னிலையிலும் கண்டிக்கிறார் (கலா 2 : 11-14). தொடக்க திரு அவையில் தலைவர்களின் பண்பு நலன்களையும், திருஅவையின் மூத்த தலைவரான பேதுருவையும் பொது வெளியில் சபையினர் முன்னிலையில் கேள்வி கேட்க, கண்டிக்க இருந்த சுதந்திர சூழ்நிலையையும் எடுத்துச் சொல்கிறது. புதிய கிறிஸ்தவரான பவுலுக்கு இருந்த கருத்து சுதந்திரம் தொடக்க திருஅவையின் தலைமை பண்புக்கு எடுத்துக்காட்டாக இருந்துள்ளது. தவறுகளைச் சுட்டிக்காட்டவும், கண்டிக்கவும், சரி செய்யவும், திரு அவையில் எல்லோருக்கும் சம உரிமையும் பொது கடமையும் உண்டு என்பதற்கு சான்றாகவும் இப்பகுதி உள்ளது.

### 10. நெருக்கடியின் போது இறைவேண்டல் செய்தது :

இறைவேண்டல் தான் தொடக்க திருஅவையின் இயல்பாக இருந்தாலும் துன்ப நேரங்களில் தொடக்க திருஅவை சிறப்பாக இறைவேண்டலில் ஈடுபட்டது. பேதுரு சிறைப்பட்டிருந்தபோது திருஅவை உருக்கமாக மன்றாடியது (தி.ப. 1: 25). தலைவர்கள் சிறைபிடிக்கப்பட்ட போது மட்டுமல்ல சீடர்களும் நம்பிக்கையாளர்களும் மறைசாட்சிய மரணத்திற்கு உட்படுத்தப்பட்டபோதும் திருஅவை துன்புறுவோருக்காக மன்றாடியது. அன்பியங்களிலும் இப்பண்பு வெளிப்படுகிறது. வேதனையிலும் சிறப்பு தேவையிலிருப்போரையும் எளிதாக சந்திக்க, அவர்களுக்காக இறைவேண்டல் செய்ய அன்பியம் துணையாக உள்ளது . அதுவே, அன்பியங்களின் அடிப்படை இயல்பாக உள்ளது.

இவ்வாறு தொடக்க திருஅவையின் வாழ்வை பிரதிபலிக்கும் தளங்களாக அன்பியங்கள் உள்ளன. அன்பியம் என்பது ஒரு அமைப்பல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. நம்பிக்கைக் கொண்ட மக்களின் வாழ்க்கை முறை போன்று இன்றைய நம்பிக்கையாளர்களின் வாழ்க்கை முறை அமையாமலிருக்கும்போது அன்பியம் ஒரு அமைப்பாக, பணிக்குழுவாக, நிறுவனமாக சுருங்கிப் போகிறது. அப்போது தான் அது அதிகாரத்தை வெளிப்படுத்தும் தளமாக உருமாறுகிறது. நமது வேர்களை மறக்கும்போது நமது அன்பியங்கள் சாரமிழந்து போகின்றன. அன்பியங்கள் தங்களுக்கான மாதிரிகளை உலகியல் அமைப்புகளில் தேடாமல் இறைவார்த்தை ஒளியில் தேடும்போது அவை திருஅவையை புதுப்பிக்கும் இயக்கமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

சிந்திக்க :

1. அன்பியம் உனது வாழ்வை நெறிப்படுத்துகிறதா ?
2. அன்பியங்களில் அவரவர் இன்ப, துன்ப நிகழ்வுகளைப் பகிர்கிறோமா ?

# மருத்துவ உலகம் - நீரிழிவுநோய்

*Dr. JOSEPHIN MBBS, MD, DNB (Gen. Med.), FCD (Diab)*
*St. Xavier Catholic Multispeciality Hospital Chunkankadai, Nagercoil.*

நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்) வகைகள் என்ன ? நீரிழிவு நோயின் வகைகள் ஹைப்பர் கிளை சீமியாவுக்கு வழிவகுக்கும் நோய்க்கிருமி செயல்முறையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன

- வகை 1 நீரிழிவு நோய் அல்லது நீரிழிவு இன்சிபிடஸ்
- வகை 2 நீரிழிவு நோய்
- கர்ப்பகால நீரிழிவு நோய்
- மரபணு குறைபாடுகள் (பீட்டர் செல் வளர்ச்சி மற்றும் இன்சுலின் செயல்பாடு)
- தற்காலிக பிறந்த குழந்தை நீரிழிவு நோய்

### நீரிழிவு இன்சிபிடஸ் வகை :

நீரிழிவு இன்சிபிடஸ் என்பது ஒரு அரிய பரம்பரைக் கோளாறு ஆகும். இது அதிகப்படியான சிறுநீரை உற்பத்தி செய்கிறது. இது பாலியூரியா (அடிக்கடி சிறுநீர் கழித்தல்) மற்றும் பாலிடிப்சியா (அதிக தாகம்) ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் தினமும் 15 முதல் 19 லிட்டருக்கு மேல் சிறுநீர் கழிப்பார்கள். மாறாக, ஆரோக்கியமான நபர்கள் பொதுவாக தினசரி 2 முதல் 3 -லிட்டர் வரை சிறுநீர் கழிப்பார்கள்.

பல்வேறு வகையான நீரிழிவு நோய்கள் உள்ளன. ஆனால் இப்போது நாம் முதலில் வகை 1 நீரிழிவு மற்றும் வகை 2 நீரிழிவு என்ற இரண்டு முக்கிய வகைகளை பற்றி விளக்கமாக பார்ப்போம்.

### வகை 1 நீரிழிவு இன்சுலின் சார்ந்த நீரிழிவு ஆகும்

பெரும்பாலும் 30 வயதிற்குட்பட்ட குடிந்தைகளிலும் மக்களிடத்திலும் கண்டறியப்பட்டுள்ளது. இதில் உலகின் நீரிழிவு நோயாளர்களில் 10 சதவிகிதம் பங்களிப்பதாக நம்பப்படுகிறது. சேதமடைந்த கணைய பீட்டா செல்கள் காரணமாக மனித உடல் குறைந்த இன்சுலின் உற்பத்தி செய்யும் போது அல்லது இன்சுலின் உற்பத்தி செய்யாமல் இருக்கும் போது இந்த நிலை ஏற்படுகிறது. இந்த குளுக்கோஸ் சேமித்து வைக்கப்படாததால் மற்றும் பயன்படுத்த முடியாததால் ஆற்றலாக அதை பயன்படுத்த முடியாத காரணமாக இரத்த ஓட்டத்தில் குளுக்கோஸ் அளவு (சர்க்கரை அதிகரிக்கிறது. ஏனெனில் குளுக்கோஸ்-ஐ ஆற்றலாக மாற்ற இன்சுலின் மிகவும் அவசியமானது. வகை 1 நீரிழிவு மேலும் இரண்டு துணை பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

சிறுநீரக நீரிழிவு டைப் 1 நீரிழிவு. 19 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் இன்சுலின் சார்ந்த (வாழ் நாள் முழுவதுமான) சிறுநீரக நீரிழிவையும் உள்ளடக்கியது. பொதுவாக சிறு குழந்தைகளுக்கு இன்சுலின் ஊசி மருந்துகள் போடப்படும்போது பெற்றோர்கள், காப்பாளர்கள் மற்றும் செவிலியர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. நீரிழிவு நோயாளிகளான சிறுவர்கள் தங்கள் டாக்டர்களால் பரிந்துரைக்கப் பட்டுள்ள இன்சுலின் அளவை தாங்களாகவே சுய செலுத்திகளில் (Self-administer insulin shots) உதவியால் போட்டுக்கொள்ளலாம்.

LADA வகை 1-ல் மேலும் ஒரு சிறப்பு வகையான வகை 2 நீரிழிவு நோயாளிகளை உள்ளடக்கியது ஆனால், அவை கணையத்தின் பீட்டா செல்களிலிருந்து தவறான அல்லது இன்சுலின் சுரப்பு இல்லாததன் காரணமாக வகை 1-ன் நிலைகளை பிரதிபலிக்கின்றன. LADA (Latent Autoimmune Diabetes Adulthood). 67 601 அழைக்கப்படுகிறது.

வகை 2 நீரிழிவு என்ற இரண்டு முக்கிய வகைகைளை பற்றி அடுத்த மாதம் விளக்கமாக பார்ப்போம்.

# நலத்திட்டங்கள்

## முளகுமூடு மறைவட்டம்

### காஞ்சிரக்கோடு

எரேமியா அன்பியத்தினர் மருத்துவ உதவியாக நோயாளி ஒருவருக்கு ரூ. 500/-ம். மழையினால் இடிந்து விழுந்த வீடு சரிசெய்ய ஏழை ஒருவருக்கு ரூ. 2,000/-ம் கொடுத்து உதவினர்.

### செம்பருத்திவிளை

புனித அல்போன்சாள் அன்பியத்தினர் கல்வி உதவியாக ஒருவருக்கு ரூ. 2,000/-ம், மருத்துவ உதவியாக நோயாளி ஒருவருக்கு ரூ. 3,000/-ம் கொடுத்து உதவினர்.

### விலவூர்

தூய சவேரியார் அன்பியத்தினர் மருத்துவ உதவியாக புற்று நோயாளி ஒருவருக்கு ரூ. 1,000/- கொடுத்து உதவினர்.

### முளகுமூடு

குழந்தை இயேசு அன்பியத்தினர் ஏழையின் இல்ல கட்டுமான பணிக்கு ரூ. 15,000/- கொடுத்து உதவினர்.

### பள்ளியாடி

- கல்வி உதவியாக அருளாளர் கார்லோ அன்பியத்தினர் ஒரு மாணவனுக்கு ரூ. 3,500/-ம், புனித அந்தோணியார் அன்பியத்தினர் இரு மாணவர்களுக்கு ரூ. 3,200/- மதிப்பில் பொருட்களும், திருமண உதவியாக புனித செபஸ்தியார் அன்பியத்தினர் ஒருவருக்கு ரூ. 2,000/-ம், நலம் நாடும் திட்டத்தில் புனித சவேரியார் அன்பியத்தினர் ரூ. 500/-ம் கொடுத்து உதவினர்.
- தேவையில் உழலும் குடும்பத்தினருக்கு பொருளுதவியாக அருளாளர் கார்லோ அன்பியத்தினர் ஒரு குடும்பத்திற்கு ரூ. 500/-ம், அற்புத குழந்தை இயேசு அன்பித்தினர் ஒரு குடும்பத்திற்கு ரூ. 2,500/-ம், புனித அந்தோணியார் அன்பியத்தினர் ஐந்து குடும்பங்களுக்கு ரூ. 1,800/-ம், புனித ஆரோக்கிய அன்னை அன்பியத்தினர் ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000/-ம், புனித தாம்ஸ்மூர் அன்பியத்தினர் ஒரு குடும்பத்திற்கு ரூ. 2,500/-ம் கொடுத்து உதவினர்.
- பிறந்த நாள் விழாவிற்கு புனித தோமா அன்பியத்தினர் ரூ. 1,000/- கொடுத்து உதவினர்.

### குழிவிளை

தூய இஞ்ஞாசியார் அன்பியத்தினர் ஏழை முதியவருக்கு ரூ. 2,000/- கொடுத்து உதவினர்.

### மாடத்தட்டுவிளை

- தேவையிலிருப்போரின் நலனுக்காக புனித சூசையப்பர் அன்பியத்தினர் ரூ. 6,000/-ம், புனித மலையப்பர் அன்பியத்தினர் ரூ. 10,000/-ம், கல்வி உதவிக்காக புனித சூசையப்பர் அன்பியத்தினர் ரூ. 2,900/-ம் கொடுத்து உதவினர்.
- மருத்துவ நலத்திட்டமாக புனித கார்மல் மாதா அன்பியத்தினர் புற்று நோய் மருத்துவமனை சந்தித்து 10 நோயாளர்களுக்கு ரூ. 10,500/-ம், ஒரு நோயாளிக்கு ரூ. 2,900/-ம், புனித தொன் போஸ்கோ அன்பியத்தினர் ஒரு புற்று நோயாளிக்கு ரூ. 1,500/-ம், உயிர்த்த இயேசு அன்பியத்தினர் ரூ. 3,500/-ம், புனித அசிசியார் அன்பியத்தினர் ரூ. 2,500/-ம், புனித லாரனஸ் அன்பியத்தினர் ரூ. 2,500/-ம், புனித எலிசா அன்பியத்தினர் ரூ. 1,200/-ம் கொடுத்து உதவினர்.
- ஏழைகள் நலத்திட்டமாக புனித தொன்போஸ்கோ அன்பியத்தினர் ரூ. 1,500/-ம், உயிர்த்த இயேசு அன்பியத்தினர் ரூ. 1,00,000/-ம், புனித சந்தியாகப்பர் அன்பியத்தினர் ரூ. 1.000/-ம், புனித செல்வ மாதா அன்பியத்தினர் ரூ. 2,000/-ம், புனித அருளானந்தர் அன்பியத்தினர் ரூ. 1,000/-ம், புனித அந்தோணியார் அன்பியத்தினர் ரூ. 500/-ம், புனித அன்னை தெரசா அன்பியத்தினர் ரூ. 2,500/-ம்,

அன்னை தெரசா ஆசிரமத்திற்கு புனித சூசையப்பர் அன்பியத்தினர் ரூ. 5,000/-ம், பிலாங்காலை மனநலம் குன்றிய ஆசிரம நலனுக்காக புனித அந்தோணியார் அன்பியத்தினர் ரூ. 11,000/-ம், மாற்றுத்திறனாளி நலனுக்காக புனித கார்மல் மாதா அன்பியத்தினர் ரூ. 2,500/-ம், 10 கிலோ அரிசியும் கொடுத்து உதவினர்.

## காரங்காடு மறைவட்டம்

### வசந்தபுரம்

கல்வி உதவியாக பிற சமய ஏழை மாணவனுக்கு முதல் அன்பியத்தினர் ரூ. 2,600/-ம், நான்காம் அன்பியத்தினர் ரூ. 1.000/- மதிப்பில் நோட் புக்கும் வாங்கிக்கொடுத்து உதவினர்.

### ஆலன்விளை

13-வது அன்பியத்தினர் ஏழை ஒருவருக்கு ரூ. 2,000/- கொடுத்து உதவினர்

### சித்தன்தோப்பு

புனித சகாய அன்னை அன்பியத்தினர் ஏழை முதியவருக்கு ரூ. 500/- கொடுத்து உதவினர்.

### முரசங்கோடு

பரலோக அன்னை அன்பியத்தினர் ஏழை குடில் திட்டத்திற்கு ரூ. 15,000/- கொடுத்து உதவினர்.

### சேவியர்புரம்

புனித சிறுமலர் அன்பியத்தினர் கல்வி உதவியாக ஒரு மாணவனுக்கு ரூ. 5,000/-ம், புனித அந்தோணியார் அன்பியத்தினர் ரூ. 10,000/-ம், புனித மரிய கொரட்டி அன்பியத்தினர் ரூ. 4,000/-ம், புனித சவேரியார் அன்பியத்தினர் மருத்துவ உதவியாக நோயாளி ஒருவருக்கு ரூ. 2,000/-ம், ரூ. 2,000/- மதிப்பில் முதியோர் ஒருவரின் வீட்டை பழுது பார்த்து கொடுத்து உதவினர்.

### காரங்காடு

ஒருங்கிணையத்தினர் சிறுநீரக மாற்று அறுவை சிகிட்சை பெற்ற ஏழை நோயாளிக்கு ரூ. 1,14,250/- கொடுத்து உதவினர்.

## மாத்திரவிளை மறைவட்டம்

### சகாயநகர்

ஏழை நோயாளியாக இருந்து இறந்துவிட்ட திரு. எடிசன் அவர்களின் குடும்பத்தினருக்கு அனைத்து அன்பியத்தினரும் இணைந்து ரூ. 43,000/- கொடுத்து உதவினர்.

### வெள்ளியாவிளை

கார்மல் மலை அன்பியத்தினர் நாகக்கோடு மதர் அன்னா புற்றுநோய் ஆற்றுப்படுத்துதல் மையத்திற்கு ரூ 5,000/-ம், 10 நாட்கள் திருவிழாவின் போது வருகைப்பவனியின் மனித நேயக் காணிக்கையாகக் கிடைத்த ரூ.10,000/-ஐ பிலாங்காலை, தொலையாவட்டம், சகாயநகர் ஆகிய முதியோர் இல்லங்களுக்கும், வெள்ளியாவிளை மகளிர் இல்லத்திற்குமாக ரூ. 2,500/- வீதம் கொடுத்து உதவினர்.

### துண்டத்துவிளை

புனித பரலோக ராக்கினி மாதா அன்பியத்தினர் கல்வி உதவியாக ஏழை மாணவனுக்கு ரூ 5,000/- கொடுத்து உதவினர்.

### பூட்டேற்றி

புனித அந்தோணியார் அன்பியத்தினர் மருத்துவ உதவியாக பிற மதத்தைச் சார்ந்த இரண்டு ஏழைகளுக்கு ரூ. 2000/- வீதம் ரூ. 4,000/-ம், புனித இஞ்ஞாசியார் அன்பியத்தினர் கல்வி உதவியாக பெற்றோரை இழந்த ஏழை மாணவனுக்கு ரூ. 2,000/- கொடுத்து உதவினர்.

### முள்ளங்கனாவிளை

14 வது அன்பியத்தினர் மருத்துவ உதவியாக நோயாளிக்கு ரூ. 3,600/-ம், 20 - வது அன்பியத்தினர் ஏழைகள் நல உதவியாக ஒருவருக்கு ரூ. 2,500/-ம் கொடுத்து உதவினர்.

நட்டாலம்

புனித ஜார்ஜியார் அன்பியத்தினர் கல்வி உதவியாக 2 ஏழை மாணவர்களுக்கு ரூ. 1,000/- வீதம் ரூ. 2,000/-ம், மருத்துவ உதவியாக புற்றுநோயாளி ஒருவருக்கு ரூ.2,500/-ம், இருவருக்கு ரூ. 2,000/-ம், புனித ஜாண் மரிய வியான்னி அன்பியத்தினர் புற்றுநோயாளி ஒருவருக்கு ரூ. 17,000/-ம் கொடுத்து உதவினர்.

## வேங்கோடு மறைவட்டம்

வெள்ளையம்பலம்

நான்காவது அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 600/- மதிப்பில் பழங்கள் வாங்கிக்கொடுத்து உதவினர்.

பாத்திமாநகர்

புனித அன்னை தெரசாள் அன்பியத்தினர் கல்வி உதவியாக ஏழை மாணவனுக்கு ரூ. 5,000/- கொடுத்து உதவினர்.

விழுந்தயம்பலம்

எட்டாவது அன்பியத்தினர் ஏழைகள் நல உதவியாக ஒருவருக்கு ரூ. 5,000/-ம், 10-வது அன்பியத்தினர் ஏழை ஒருவருக்கு ரூ. 2,000/- மதிப்பில் எமர்ஜென்சி லைட்டும் வாங்கிக் கொடுத்து உதவினர்.

வளனூர்

புனித அற்புத மாதா அன்பியத்தினர் மருத்துவ உதவியாக இரண்டு ஏழைகளுக்கு ரூ. 1,000/- வீதம் ரூ. 2,000/- கொடுத்து உதவினர்.

முஞ்சிறை

ஏழைகள் நல உதவியாக புனித அந்தோணியார் அன்பியத்தினர் மூன்று ஏழைகளுக்கு ரூ. 1000/- வீதம் ரூ. 3,000/-ம் புனித கார்மல் அன்பியத்தினர் ஒரு ஏழைக்கு ரூ. 2,000/-ம், கல்வி உதவியாக புனித பவுலடியார் அன்பியத்தினர் ஏழை மாணவிக்கு ரூ. 1,100/-ம் கொடுத்து உதவினர்.

செபஸ்தியார்புரம்

நான்காவது அன்பியத்தினர் முதியவருக்கு ரூ. 500/- மதிப்பில் பழங்கள் வாங்கிக் கொடுத்தும், ஐந்தாவது அன்பியத்தினர் ஏழை ஒருவருக்கு ரூ. 500/-ம் கொடுத்து உதவினர்.

காப்புக்காடு

சகாய மாதா அன்பியத்தினர் மருத்துவ உதவியாக ஒரு நோயாளிக்கு ரூ. 2,000/- கொடுத்து உதவினர்.

இலவுவிளை

புனித ஞானபிரகாசியார் அன்பியத்தினர் ஏழைகள் நல உதவியாக ஒருவருக்கு ரூ. 2,000/-ம் மருத்துவ உதவியாக புனித லூர்து அன்னை அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 1,000/-ம், புனித ஆரோக்கிய அன்னை அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 500/-ம், அன்பிய ஒருங்கிணையம் சார்பாக வயநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 33,850/-ம் கொடுத்து உதவினர்.

சடையன்குழி

புனித அந்தோணியார் அன்பியத்தினர் ஏழைகள் நல உதவியாக ஒரு ஏழைக்கு ரூ. 4,000/- கொடுத்து உதவினர்.

## புத்தன்கடை மறைவட்டம்

பாக்கியபுரம்

புனித பவுல் அன்பியத்தினர் மருத்துவ உதவியாக ஒரு நோயாளிக்கு ரூ. 1,000/- கொடுத்து உதவினர்.

குலசேகரம்

புனித அந்தோணியார் அன்பியத்தினர் ஒரு கைம்பெண்ணுக்கு ரூ. 500/-ம் ஊனமுற்றோர் இல்லத்திற்கு ரூ. 500/-ம், புனித இம்மானுவேல் அன்பியத்தினர் மருத்துவ உதவியாக ஒரு நோயாளிக்கு ரூ. 1,000/-ம், புனித

வேளாங்கண்ணி அன்பியத்தினர் கல்வி உதவியாக இரண்டு ஏழை மாணவர்களுக்கு ரூ. 900/- மதிப்பில் School பேக் வாங்கிக்கொடுத்தும் உதவினர்.

ஈஞ்சகோடு

மருத்துவ உதவியாக புனித அல்போன்சாள் அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 3,500/-ம், இன்னொரு நோயாளிக்கு ரூ. 3,700/-ம், புனித செபமாலை அன்பியத்தினர் நான்கு நோயாளிகளுக்கு ரூ. 3,050/-ம் கொடுத்து உதவினர்.

## திரித்துவபுரம் மறைவட்டம்

மருதங்கோடு

மருத்துவ உதவியாக தூய தேவசகாயம் அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 500/- கொடுத்து உதவினர்.

சிலுவைபுரம்

மருத்துவ உதவியாக 16-வது அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 5,100/- கொடுத்து உதவினர்.

சூழால்

கல்வி உதவியாக தூய பனிமய மாதா அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 1000/-ம், ஏழைகள் நல உதவியாக தூய பனிமய மாதா அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 2,000/-ம் கொடுத்து உதவினர்.

நல்லூர்

ஏழைகள் நல உதவியாக தூய சூசையப்பர் அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 1,300/- மதிப்பில் துணிகளும், ரூ. 1,100/- மதிப்பில் பொருட்களும் வாங்கிக்கொடுத்து உதவினர்.

குழித்துறை

6-வது அன்பியத்தினர் 30 நபர்களுக்கு மதிய உணவும், பங்கிலுள்ள 78 முதியவர்களுக்கு தலா ரூ. 500/- வீதம் ரூ. 39,000/- கொடுத்து உதவினர்.

வெட்டுவெந்நி

மருத்துவ உதவியாக தூய அல்போன்சாள் அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 2.000/-ம், கிறிஸ்து அரசர் அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 1,000/-ம், கல்வி உதவியாக தூய சகாய மாதா அன்பியத்தினர் மூன்று மாணவர்களுக்கு ரூ. 3,000/-ம் கொடுத்து உதவினர்.

தோமையார்புரம்

மருத்துவ உதவியாக தூய மாற்கு அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 500/- மற்றும் தூய அந்தோணியார் அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 500/-ம், ஏழைகள் நல உதவியாக தூய யோவான் அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 3,000/- மற்றும் தூய அந்தோணியார் அன்பியத்தினர் ஒரு நபருக்கு ரூ. 3,000/- மதிப்பில் பொருட்களும் கொடுத்து உதவினர்.

ஐக்கிய நகர்

அன்பிய ஒருங்கிணையம் சார்பாக காரோடு மனநல காப்பகம் சந்தித்து ரூ. 2,500/-ம் மதிப்பில் பொருட்களும், ரூ. 12,000/- ரொக்கமாகவும் கொடுத்து உதவினர்.

மேல்புறம்

மருத்துவ உதவியாக தூய அமல அன்னை அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 500/- கொடுத்து உதவினர்.

நெல்லிக்காவிளை

அன்பிய ஒருங்கிணையம் கருங்கல் முதியோர் இல்லம் சந்தித்து ரூ. 6,000/- மதிப்பில் பொருட்கள் மற்றும் ரூ. 4,000/- ரொக்கமாகவும் கொடுத்து உதவினர்.

பரக்குன்று

மருத்துவ உதவியாக தூய தோமையார் அன்பியத்தினர் ஒரு நோயாளிக்கு ரூ. 4,300/- கொடுத்து உதவினர்.

# அன்பிய ஒருங்கிணையக் கூட்டங்கள்



காப்புக்காடு



தக்கலை



கண்டன் விளை



பரக்குன்று



பாகோடு



மாத்தூர்கோணம்



கப்பியறை

# சங்கம விழா மற்றும் மறைவட்டப் பொதுக்குழு கூட்டங்கள்



இதயபுரம் - சங்கமவிழா



சிற்றாறு - சங்கமவிழா



பிலாவிளை - சங்கமவிழா



வேங்கோடு - பொதுக்குழு கூட்டம்



முளகுமூடு - பொதுக்குழு கூட்டம்



புத்தன்கடை - பொதுக்குழு கூட்டம்



மாத்திரவிளை - பொதுக்குழு கூட்டம்



காரங்காடு - மறைவட்ட பொதுக்குழு



திரித்துவபுரம் - மறைவட்ட பொதுக்குழு



வேங்கோடு - மறைவட்ட செயற்குழு



மறைமாவட்ட அன்பிய பணிக்குழு கூட்டம்

### பிள்ளவிளை

தலைவர் : திரு. T. ஆனந்த மரிய சேவியர்
செயலர் : திருமதி. S. வசந்தி
பொருளர் : திரு. ஜாண் சுந்தர் ராஜ்

### முக்கலம்பாடு

தலைவர் : திருமதி. L. டெல்பின் ராணி
து.தலைவர் : திரு. V. மரிய சுவக்கின்
செயலர் : திருமதி. J. ஜென்சி ஜோஸ்
து.செயலர் : திரு. M. சுஜின் செல்வன்
பொருளர் : திருமதி. S. கிறிஸ்டல் மேரி

### பிலாவிளை

தலைவர் : திருமதி. G. மேரி ஸ்டெல்லா
து.தலைவர் : திருமதி. V. மேரி ஷோபா
செயலர் : திருமதி. A. ஜடா மேரி
து.செயலர் : திருமதி. M. லூயிஸ் மேரி
பொருளர் : திருமதி. J. மரிய ஜாண்சி

### திருவிதாங்கோடு

தலைவர் : திருமதி. A. கிருஷ்ணம்மாள்
து.தலைவர் : திரு. D. ஜமுனா
செயலர் : திருமதி. J. லீலா
து.செயலர் : திரு. R. செல்வ ராணி
பொருளர் : திருமதி. A. வசந்தி

### திரித்துவபுரம் மறைவட்டம் (பாத்திமாபுரம்)

தலைவர் : திரு. செல்வராஜ்
து.தலைவர் : திருமதி. மரிய திருசியா
செயலர் : திரு. S. சுபின் ராஜ்
து.செயலர் : திருமதி. செலீனா
பொருளர் : திருமதி. பெனிட்டா

### காரங்காடு மறைவட்ட நிர்வாகிகள்

தலைவர் : திரு. K. ஜூடு பென்சிகர்
து.தலைவர் : திரு. V. ஜெகதீஷ் பிரபு
செயலர் : திருமதி. A. அனிலா அலெக்ஸ்
து.செயலர் : திருமதி. S. ஆன்றோ பென்சி
பொருளர் : திருமதி. R. ஜெமிலா றோஸ்

### புத்தன்கடை மறைவட்டம் (பாய்க்காடு)

தலைவர் : திரு. குணசீலன்
து.தலைவர் : திருமதி. உஷா
செயலர் : செல்வி. மெர்சிலின்
து.செயலர் : திருமதி. ஞான சௌந்தரி
பொருளர் : திருமதி. செலின் மேரி

### முளகுமூடு மறைவட்டம்(முட்டைக்காடு)

தலைவர் : திரு. சுஜின்
து.தலைவர் : திருமதி. சரோஜா
செயலர் : திருமதி. வினிதா
து.செயலர் : திருமதி. செல்வி
பொருளர் : திரு. மெர்லின் ஜேம்ஸ்

## ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 01.09.2024 | இ.ச. 4 : 1-2, 6-8 | தி.ப. 1:17-18, 21b-22,27 | மாற். 7:1-8,14-15,21-23 |
| 2 | 08.09.2024 | எசா. 35: 4-7a | யாக். 2 : 1-5 | மாற். 7 : 31-37 |
| 3 | 15.09.2024 | எசா. 50 : 5-9a | யாக். 2 :14-18 | மாற். 8 : 27-35 |
| 4 | 22.09.2024 | சா.ஞா. 2 : 17-20 | யாக். 3 : 16-4 : 3 | மாற். 9 : 30-37 |
| 5 | 29.09.2024 | எண் 11 : 25-29 | யாக். 5 : 1-6 | மாற் 9 : 38-48 |

*அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.*

தொடர்புக்கு ...
9487110298, 8870513177

*அன்பிய இயக்குநர்*

அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்,
உண்ணாமலைக்கடை - 629 179

# முளகுமூடு தூய மரியன்னை பசிலிக்கா திருவிழா-2024



## 06.09.2024 முதல் 15.09.2024 வரை




**திருவிழா காணவரும்**
**அனைத்து பக்தர்களையும்**
**அன்புடன் வரவேற்கிறோம்...**



**அனைவரும் வருக!**